ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கம்
Anti-Sterlite People's Movement
77, பெரிய கடை தெரு, தூத்துக்குடி - 628001. 9843412669, 9994986276, 8098031133.

தேதி :

**10.05.2021**

## ஊடக அறிக்கை 10 மே, 2021

புதிய அரசானது, வேதாந்தா மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க கோரி உலகளாவிய கவனயீர்ப்பு செயல்பாடு

**தூத்துக்குடி/சென்னை :**

ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கமும் அவர்களோட இணைந்து செயல்படும் அமைப்புக்களும் மே 22ஆம் தேதியை வேதாந்தா நிறுவனத்திற்கு எதிரான உலகளாவிய செயல்பாட்டு நாளாக அறிவித்து, கூட்வே தூத்துக்குடியில் நீதிக்கான உலகளாவிய இணையவழி (JustAction.cc வழியாக) தொடர் பட்டினி போராட்டத்தையும் அறிவித்துள்ளனர். 2018 மே 22-இல் நடத்தப்பட்ட படுகொலைகள் மூன்றாம் ஆண்டினை எட்டும் இவ்வேளையில், இந்த பிரச்சாரத்தின் நோக்கம்: புதிய அரசு வேந்தாந்தா நிறுவனம் மற்றும் அதன் இயக்குனர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும், ஸ்டெர்லைட் எதிர்ப்பாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்படவேண்டும், மற்றும் மே 22, 2018 அன்றும் அதற்கு பிறகும் காவல் துறையால் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணையை விரைவுபடுத்துதல் வேண்டும்.

ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பாத்திமா பாபு கூறுகையில்: "புதிய அரசு தூத்துக்குடியில் இயல்புநிலை கொண்டு வர எல்லாம் நடவடிக்கைகளும் எடுக்கும் என எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. மாசு படுத்துதல், மோசடி, உரிமமற்ற செயல்பாடு, விஷ வாயு கசிவு என பல குற்றங்களுக்குக் மூட பட்ட வேதாந்தா மீது ஒரு குற்றவியல் வழக்கு கூட முன்னாள் அதிமுக அரசு பதிவு செய்ய மறுத்துவிட்டது. மாறாக, அதே அரசு சுத்தமான காற்று வேண்டும் என உரிமைப் போரில் ஈடுபட்ட மக்கள் மீது துப்பாக்கி சூடும், 71 நபர்கள் மீது வழக்குகளும் பதிவு செய்திருக்கிறது. புதிய அரசாவது, சட்டத்தை பின்பற்றி 15 உயிர்களை இழந்த இந்த நகரத்திற்கு ஆறுதல் அளிக்கும் வகையில் வேதாந்தா மற்றும் அதன் இயக்குனர்கள் மீது சுற்றுசூழல் மற்றும் ஈபிகோ சட்டங்களின் படி குற்றவியல் வழக்குகள் தொடரும் என நம்புகிறோம்."

கொரோனா சூழல்களையும் மனதில் நிறுத்தி, அவை தொடர்பான அரசின் விதிமுறை மீறல்கள் எதுவும் நிகழமுடியா விதமாக, இந்த புதிய அறவழி போராட்டம் மே 12 முதல் 22 வரையிலான 11 நாள் உண்ணா நிலை போராட்டம் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். வீட்டில் இருந்த படியே இந்த பத்து நாட்களில் பங்கேற்பாளர்களின் வசதிபடி இப்போராட்டத்தில் பங்கேற்கலாம்.

# ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கம்

## Anti-Sterlite People's Movement

77, பெரிய கடை தெரு, தூத்துக்குடி - 628001. 9843412669, 9994986276, 8098031133.

தேதி :

தூத்துக்குடி மக்களின் கோரிக்கைகளுக்கு வலு சேர்க்க 18 வயதுக்கு மேற்பட்ட, மற்றும் திடகாத்திரமான உடல்நலம் கொண்ட அனைவரும் இந்த தொடர் பட்டினி போராட்டத்தில் 12 மே-இலிருந்து 22 மே வரை ஏதாவது ஒரு நாள் உண்ணாமல் இருந்து உண்ணா நிலை போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

வரவிருக்கும் இந்த மே 22-ஆம் நாள் அன்று 2018-இல் நடந்த படுகொலையின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் ஆகும். 2018-ஆம் ஆண்டு இதே நாளில் தமிழக காவல் துறை மக்களின் மீது துப்பாக்கி சூடு நடத்தி, 17 வயதே நிரம்பிய சிறுமி உட்பட 13 பேரை சுட்டு தள்ளினார்கள். அதன் பிறகே மாநில அரசு தாமிர ஆலையை மூடியது. எத்தனை மரணங்கள், எத்தனை படுகாயங்கள், 2018-இலே எத்தனை முறையற்ற கைதுகள், சட்டவிரோதமான தடுப்புகாவல்கள், காவல் நிலைய கொடூரங்கள். ஆனால் இன்றளவும், இந்த படுகொலைக்கு காரணமான ஒருவரை கூட அடையாளப்படுத்த வில்லை, தண்டிக்கவுமில்லை. வேதாந்தா மீது அவர்களின் பொய்புரட்டுக்கள், அனுமதியற்ற இயக்கங்கள், அத்துமீறிய மாசுபடுத்துதல் - இவை எவற்றிற்காகவும் எந்தவிதமான குற்ற நடவடிக்கைகளும் இல்லை.

இந்த உலகளாவிய செயல்பாட்டு நாளை நோக்கிய 10 நாள் போராட்டங்களிலே வேதாந்தா எங்கெல்லாம் இயங்கிவருகிறதோ அங்கெல்லாம் அது எவ்வளவு சுற்றுச்சூழல் அக்கறையின்மையோடும் எத்தனை சமூக பொறுப்பற்றவிதமாக செயல்பட்டு வருகின்றது என்பது அம்பலப் படுத்தப்படும்.

மே 14 அன்று டல்வாண்டி சாபோ, பஞ்சாப், சித்தோர்கட், ராஜஸ்தான், கோர்பா, சத்திஸ்கர், நியமகிரி, ஒடிஷா மற்றும் ஜாம்பியாவின் சிங்கோலாவில் வேதாந்தாவின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நடவடிக்கை வரலாறு எப்படிப்பட்டதாக இருந்திருக்கின்றது என்பதையும் அங்குள்ள மக்கள் வெளிகொணர இருக்கிறார்கள்.

நாங்கள், புதிய திமுக அரசை வாழ்த்தி வரவேற்கும் இந்த வேளையில், எங்களின் கீழ்கண்ட கோரிக்கைகள் மீது அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

1. வேதாந்தா நிறுவனம் தூத்துக்குடியை விட்டு நிரந்தரமாக வெளியேற்றப் படவேண்டும்.
2. சுற்றுச்சூழல் சட்டங்கள் பலவற்றை மீறியதற்கும், பித்தலாட்டம் பல நிகழ்த்தியதற்கும் வேதாந்தாவின் நிர்வாகிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.

ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கம்
Anti-Sterlite People's Movement
77, பெரிய கடை தெரு, தூத்துக்குடி - 628001. 9843412669, 9994986276, 8098031133,

தேதி :

3. 2018 ஆம் ஆண்டு திட்டமிட்டு துப்பாக்கி சூடு நடத்தி, படுகொலை செய்த காவல்துறையினரை அடையாளம் கண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. வேதாந்தாவும் அரசு முகமைகளும் கைகோர்த்து மக்களின் மீது நடத்திய வன்முறையை திசைதிருப்ப பொது மக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும்.

5. தேசிய மனித உரிமை ஆணையம் தானே முன் வந்து மேற்கொண்டு, பின் கைவிட்ட விசாரணையை மீண்டும் உயிர்ப்பித்து அதன் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

6. மூன்று ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடிவடையாமல் இருக்கும் தூத்துக்குடி படுகொலை தொடர்பான நீதியரசர் அருணா ஜெகதீசன் கமிஷனின் விசாரணையை இணைய வழியில் விரைவாக நடத்தி முடிக்க வேண்டும்.

ஸ்டெர்லைட் எதிர்ப்பு மக்கள் இயக்கத்தால் ஒருங்கிணைக்கப்படும் இவ்வுலகளாவிய பிரச்சாரம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை, Yugma Network, சென்னை காலநிலை செயல்பாட்டு குழு (Chennai Climate Action Group), இந்தியாவை மூச்சு விடவிடு (Let India Breathe), சென்னை ஆதரவு குழு (Chennai Solidarity Group), அரசியலுக்காக இளைஞர்கள் (Young People for Politics ), பீப்புல்ஸ் வாட்ச் (People'sWatch) மற்றும் மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பு (Human Rights Defenders Alert) மற்றும் மீனவ அமைப்புகளின் ஆதரவுடன் செயல்படுத்தப்படுகிறது.

**மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: பாத்திமா பாபு: 7339110763**

10-05-2021

N.A. கிருஷ்ணமூர்த்தி -
10/05/2021 -

P. Sekhar

R. Navaneetha Krishnan